**<u>பெயர்– அருண்</u>**

**<u>தந்தை பெயர்–குருநாதன்</u>**

**<u>நாள்– 05.03.2024</u>**

**<u>OS NO. 227/2010</u>**

**<u>வா.சா.1 – 1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ–4 எந்த பட்டா எண்ணிற்கான பட்டா புத்தகம் என்றால் பட்டா எண்.1–ற்கானதாகும். என்னுடைய வழக்கின் படி தாவா சொத்துக்கள் பட்டா எண்.1–ல் அடங்கும் என்றால் சரிதான். வா.சா.ஆ.4–ல் 5 வது பக்கம் மட்டும் இணைக்கப்பட்டுள்ளது போன்று உள்ளது என்றால் சரியல்ல, அந்த பக்கம் தனியாக வந்துவிடக்கூடாது என்பதற்காக அவ்வாறு தைக்கப்பட்டுள்ளது. சர்வே எண்.120/4, 120/1, 93/2D, 93/2C, 93/2B, 134 ஆகியவற்றிற்கு பட்டா எண்கள்.835, 15, 53, 105, 141 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த பட்டா எண்ணில் கண்டுள்ள சர்வே எண்கள் குறித்து இந்த வழக்கினை குறித்து வேறு வழக்கிலோ அல்லது நடைமுறைகளிலோ இந்த பட்டா புத்தகத்தை தாக்கல் செய்தேனா என்றால் செய்திருக்கிறேன் ஆனால் இன்னும் நடைமுறைக்கு வரவில்லை. நான் இன்னும் விசாரணைக்கு வரவில்லை என்று குறிப்பிடும் வழக்கு மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் உள்ள அசல்வழக்கு எண்.21/2012 என்ற டிரஸ்டு சம்மந்தப்பட்ட வழக்கு என்றால் சரிதான். சர்வே எண்.120/4, 120/1, 93/2D ஆகியவை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்கில் அடங்கவில்லை என்றால் சரியல்ல.

**<u>வா.சா.1 – 3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

பட்டா எண்.1 ஆனது சிவகொழுந்து வகையறாவிற்கு பாத்தியப்பட்டது என்பதை காட்டுவதற்காக தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். பட்டா எண்.1 ஐ பொறுத்து சிவகொழுந்து என் தந்தை குருநாதன் என்பவருக்கு அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த பவர் பத்திரத்தில் தாவா சொத்துக்கள் அடங்கியுள்ளதா என்றால் அடங்கியுள்ளது. அந்த பவர் பத்திரததில் தாவா சொத்துக்கள் அடங்கியிருக்கவில்லை என்பதால் தான் அந்த ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆன சிவகொழுந்து வகையறா என் தந்தைக்கு எழுதிக்கொடுத்த பவர் பத்திரத்தில் தாவா சொத்துக்கள் கண்டுள்ளதா என்றால் இல்லை. அந்த கிரய பத்திரம் முன்னிலைக்கு தான் வா.சா.ஆ.3 ஆன கிரய ஆவணத்தை

என் தந்தை எனக்கு எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். பொது அதிகார ஆவணமான வா.சா.ஆ–2–ல் குறிப்பிடாத சொத்துக்கள் குறித்து என் தந்தை வா.சா.ஆ.3 முன்னிலைக்கு என் பெயருக்கு எவ்வாறு கிரயம் எழுதிக்கொடுத்தார் என்றால் அதில் குறிப்பிடாத சொத்துக்கள் பட்டாவில் உள்ளது அந்த பட்டா அடிப்படையில் அவர் எனக்கு கிரயம் எழுதிக்கொடுத்தார். வா.சா.ஆ.4–ல் உள்ளே கண்டுள்ள பட்டா எண்கள் அதன் முதல் பக்கத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ–4 ஆன பட்டா புத்தகத்தில் 4 வது பக்கத்தின் கீழே மொத்த விஸ்திரணம் குறித்த அளவுகள் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் அதன் 5 வது பக்கத்தை நானாகவே பூர்த்தி செய்து இந்த வா.சா.ஆ–4–ல் இணைத்துள்ளேன் என்றால் சரியல்ல. சிவகொழுந்து வகையறா என் தந்தைக்கு எழுதிக்கொடுத்த பவர் பத்திரத்தில் கண்டுள்ள சொத்து அவரது குடும்ப டிரஸ்டு மூலமாக வந்த சொத்துக்கள் என்றால் சரிதான். அந்த சிவகொழுந்து செட்டியார் குடும்ப டிரஸ்டில் தாவா சொத்துக்கள் காணப்படவில்லை என்றால் என்றால் சரியல்ல. அதனால் தான் அந்த சிவகொழுந்து செட்டியாரின் குடும்ப டிரஸ்ட் ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

ஒப்பம்/–(R.ராஜேஸ்வரி,B.Com.,L.L.M.,)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காஞ்சிபுரம்.